**செய்தி வெளியீடு எண்:19** **நாள்:12.01.2021**

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
## (கலை பண்பாட்டு ஆணையகம், தமிழ்நாடு அரசு)

தமிழக அரசின் ஆணைப்படி, உலக நாடக தினம் (WORLD THEATRE DAY) ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று தமிழகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. இதில், புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மௌன மற்றும் இசை நாடகங்கள் போன்ற ஒன்பது வகையான புதிய நாடகங்களை மேடையேற்றம் செய்திட தகுதியுள்ள வல்லுநர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்கூறிய ஒன்பது துறைகளிலிருந்தும், புதிய நாடகங்கள், புதிய கருத்துருக்களைக் கண்டறிந்து, அவற்றை நாடக வடிவில் எழுதி, கட்டமைத்து துறைக்கு ஒரு நாடகம் என்று மேடையேற்றம் செய்திட திட்டமிடப் பட்டுள்ளது. மேலும், கருத்துருக்கள் புதியனவையாகவும், அவை கண்டறியப்பட்ட மூலநூல்களிலிருந்து வேறுபடாதவாறும் அவற்றை நாடகங்களாக அமைத்திட வேண்டும்.

நமது பண்பாடு, கலாச்சாரம், மொழி, கலைகள்,ஒருமைப்பாடு போன்றவற்றிற்கு மாறுபட்ட கருத்துக்கள் இந்த நாடகங்களில் இடம்பெறாதவாறு அமையப்பெற வேண்டும். மேலும் மேடையேற்றம் செய்யப்பட உள்ள புதிய நாடகங்கள் அரசையோ அல்லது அரசின் திட்டங்களையோ விமர்சனம் செய்யாதவாறும், இந்திய அரசியலாமப்புச் சட்டத்திற்கு உட்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் அமையப்பெற வேண்டும்.

ஒவ்வொரு நாடகமும் சுமார் 2 மணி நேரத்திற்குள் முடியும் வகையில் அமையப்பெற வேண்டும். நாடகம் மேடையேற்றம் செய்வதற்கான அமைப்புச் செலவினம் மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். நாடக ஆசிரியர் மற்றும் நாடகக் குழுவிற்கு மன்றத்தால் நிர்ணயிக்கப்படும் மதிப்பூதியமும் வழங்கப்படும்.

மேலே கூறியுள்ள திட்டங்களின் கீழ், பங்கு பெற விரும்பும் வல்லுநர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பத்துடன் புதிய நாடகத்தின் தலைப்பு மற்றும் நாடகத்தின் மூன்று முழுப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். மேலே கூறியுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விண்ணப்பங்கள் கீழ்க் கண்ட முகவரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 05–02–2021 தேதி (வெள்ளிக் கிழமை) மாலை 05.00 மணி.

**உறுப்பினர்–செயலாளர்,**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,**
**31, பொன்னி, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை,**
**சென்னை–600 028.தொ.பே.044–2493 7471.**
**மின்னஞ்சல்– tneinm@gmail.com, tneinm@tn.gov.in**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**